# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
*************

## ஊடக அறிக்கை

**விசாகபட்டினத்தில் சர்வதேச கடற்படை கண்காட்சி (IFR) & MILAN 2026**

இந்திய கடற்படையால், 2026 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை விசாகபட்டினத்தில் சர்வதேச கடற்படை கண்காட்சி (IFR) மற்றும் MILAN 2026 ஆகிய முன்னோடி கடற்படை பயிற்சிகள் மற்றும் கண்காட்சி நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வுகளில் 75 வெளிநாட்டு பிரதிநிதிகள், 50 விமானங்கள் மற்றும் 18 நட்புநாடுகளின் 19 போர்க்கப்பல்கள் உட்பட 71 கப்பல்கள் பங்கேற்கின்றன. 'சமுத்திரங்கள் மூலமான ஐக்கியம் என்ற தொனிப்பொருளில் சர்வதேச கடற்படை மதிப்பாய்வும், 'தோழமை, ஒத்துழைப்பு, ஒன்றிணைவு" என்ற தொனிப்பொருளில் MILAN பயிற்சிகளும் வழிநடத்தப்படும் அதேவேளை இந்தப் பதிப்பு, தொழில்முறை பரிமாற்றங்கள், செயற்பாட்டு பயிற்சிகள் மற்றும் கலாசார கொண்டாட்டங்கள் உள்ளிட்ட அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

2. 2026 பதிப்பானது, பங்கேற்பாளர்களுக்கு துறைமுகத்தில் செயல்பாட்டு உள்நோக்குகளை பகிர்ந்து கொள்ளல், கடலில் தொழில்முறை ஆளுமைகளை மேம்படுத்தல், விளையாட்டுத் துறைகளில் தோழைமையை வலுவாக்கல், இந்திய கலாசாரத்தின் செழுமையில் மூழ்குதல் ஆகியவற்றுக்கான பெறுமதியான வாய்ப்புகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

3. விசாகபட்டினத்தில் 2026 பெப்ரவரி 18, அன்று காலை நடைபெற்ற கடற்படை கண்காட்சி நிகழ்வுகளை மாண்புமிகு இந்திய ஜனாதிபதி ஸ்ரீமதி திரௌபதி முர்மு அவர்கள் பார்வையிட்டார். இதன்போது போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களின் அணிவகுப்பு, பல்வேறு நட்பு நாடுகள் மற்றும் இந்தியாவின் கப்பல்கள் நங்கூரமிடும்போது கடற்படை விமானங்களின் சாகசங்கள் ஆகியவை இடம்பெற்றன. பாய்மரக் கப்பல்களின் அணிவகுப்பு, உலங்குவானூர்திகள் மூலமான தேடல் மற்றும் மீட்பு பயிற்சிகள் மற்றும் மரைன் கமாண்டோக்களின் கண்காட்சி போன்ற பல கவர்ச்சிகரமான செயல்பாடுகளும் கடற்படை மீளாய்வில் உள்வாங்ப்பட்டிருந்தன.

4. உள்நாட்டில் கட்டப்பட்ட கடற்படையின் ஆழ்கடல் ரோந்து கப்பலான (NOPV) ஐஎன்எஸ் சுமேதாவில் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொட அவர்கள், மாண்புமிகு ஜனாதிபதி சகிதம் இந்த மீளாய்வு நிகழ்வை பார்வையிட்டார். மேலும், இலங்கை மற்றும் இந்தியா இடையே நெருங்கிய பிராந்திய கடல்சார் உறவுகளை வலுப்படுத்தும் இந்நிகழ்வுகளில் இலங்கை கடற்படையின் கப்பல்களான சாகர மற்றும் நந்திமித்ர ஆகியவையும் இணைந்திருந்தன.

*****************

கொழும்பு
19 பெப்ரவரி 2026.